**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.21/2023**
**Prosecution Witness**:14

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. ஆனந்த் (PW14) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th day of January 2026 by V.Nivedha Assistant, District Munsif Cum Judicial Magistrate Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present. )*

**முதல் விசாரணை:–**

நான் தற்போது நாகப்பட்டினம் மாவட்டம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 2023ம் வருடம் கொடுமுடி காவல்நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். கடந்த 30.04.2023ம் தேதியன்று சிவகிரி காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.அருள்சாமி என்பவர் பதிவு செய்து மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்திருந்த சிவகிரி காவல் நிலைய குற்ற எண்.69/2023 ச/பி.279, 304(A) இதச வழக்கினை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

2. வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 30.04.2023ம் தேதி மாலை 17.30 மணிக்கு சம்பவ இடமான சின்னியம்பாளையம் காலனி அருகில் சென்று சாட்சிகள் வீரன் மற்றும் துரைசாமி ஆகியோர்கள் சம்பவ இடத்தை அடையாளம் காண்பிக்க அவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் சம்பவ இடத்தில் வைத்து சாட்சிகள் பழனியம்மாள், மாரிமுத்து, பழனிச்சாமி, சதீஷ், மலைச்சாமி, பாலகிருஷ்ணன், நித்யா, வீரன் மற்றும் துரைசாமி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர் 01.05.2023ம் தேதி ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு சென்று அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த இவ்வழக்கில் இறந்துபோன முத்துவீரன் என்பவரது பிரேதத்தின் மீது காலை 08.00 மணிமுதல் 10.00 மணிவரை பஞ்சாயத்தார்கள் மற்றும்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.29 15:28:23 +0530

சாட்சிகள் முன்னிலையில் பிரேதத்தை பார்வையிட்டு பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. இறந்துபோன முத்துவீரன் என்பவரின் இறப்பிற்கான மருத்துவ ரீதியான காரணம் அறியும் பொருட்டு அவரது பிரேதத்தை சடலக்கூராய்வுக்கு ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை அலுவல் மருத்துவ அலுவலருக்கு தலைமைகாவலர் 2312 திரு.அன்புராஜ் என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன்.

3. பின்னர் பிரேத விசாரணை சாட்சிகளான குமார் மற்றும் மகேந்திரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் தயார் செய்தேன். பழனியம்மாள், பழனிச்சாமி, மாரிமுத்து ஆகியோர்களை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 03.05.2023ம் தேதியன்று மதியம் 13.30 மணிக்கு சிவகிரி காவல்நிலையத்தில் விசாரணைக்காக ஆஜரான இவ்வழக்கின் எதிரி சதீஷ் என்பவரை கைது செய்து திரேக பரிசோதனை செய்து உரிய பிணையின் பேரில் விடுவித்தேன்.

4. 03.05.2023ம் தேதி விபத்தில் எதிரி ஓட்டிவந்த வாகனமான TN 86 F 4078 என்ற எண்ணுள்ள JCB வாகனத்தையும், மற்றொரு வாகனமான TN 54 X 2439 என்ற எண்ணுள்ள டாடா ஏஸ் என்ற நான்கு சக்கர வாகனத்தையும் விபத்தின் காரணம் அறியும் பொருட்டு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பிவைத்தேன். பின்னர் எதிரி ஓட்டி வந்த வாகனத்தின் உரிமையாளரான சந்திரமோகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் கடந்த 09.06.2023ம் தேதியன்று மேற்சொன்ன இரண்டு வாகனங்களையும் தணிக்கை செய்து சான்று வழங்கிய ஈரோடு வட்டார போக்குவரத்து அலுவலகத்தை (கிழக்கு) சேர்ந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. சிவகுமார் என்பவரை விசாரணை செய்து வாகனங்களின் தணிக்கை சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **TN 86 F 4078 என்ற எண்ணுள்ள JCB வாகனத்திற்கு வழங்கிய தணிக்கை சான்று அ.சா.ஆ. 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **TN 54 X 2439 என்ற எண்ணுள்ள டாடா ஏஸ் என்ற நான்கு சக்கர வாகனத்திற்கு வழங்கிய தணிக்கை சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு**

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.29 15:28:28 +0530

**செய்யப்படுகிறது. (அரசு தரப்பில் கு.வி.மு.ச.294(3)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

5. 09.06.2023ம் தேதி விபத்தில் இறந்துபோன முத்துவீரன் என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்கிய ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையை சேர்ந்த மருத்துவர் திரு.அடைக்கலவன் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அரசு தரப்பில் கு.வி.மு.ச.294(3)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)** பிரேத பரிசோதனையின் போது வழிக்காவல் செய்த நிலைய தலைமைகாவலர் 2312 திரு.அன்புராஜ் என்வரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிவகிரி காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.அருள்சாமி என்பவரையும் விசாரித்தேன்.

6. இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரி சதீஷ் என்பவரின் பேரில் கடந்த 09.06.2023ம் தேதி பிரிவுகள் ச/பி.279, 304(A) இதசவின் கீழ் இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்பித்தேன். என்னுடைய விசாரணையின் போது சாட்சிகள் சதீஷ் மற்றும் மலைச்சாமி ஆகியோர்கள் வாக்குமூலங்களில் உள்ளது போல் கூறிவிட்டு நீதிமன்றத்தில் பிறழ்சாட்சிகளாக மாறியுள்ளார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

சம்பவ இடத்தில் இரண்டு புறமும் மண்பாதை உள்ளது என்றால் சரிதான். விபத்தில் ஈடுபட்ட டாடா ஏஸ் வாகனம் ரோட்டில் நிறுத்தி வியாபாரம் செய்யும்போது எச்சரிக்கை பலகை எதுவும் வைக்கப்பட்டதா என்றால் இல்லை. டாடா ஏஸ் வாகனம் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் படி ஓடும் நிலையில் தான் இருந்தது என்றால் ஓடும் நிலையில் தான் இருந்தது. டாடா ஏஸ் வாகனத்தின் பின்புற பகுதி கதவு மட்டுமே வளைந்திருந்தது என்றால் சரிதான். டாடா ஏஸ் வாகனம் முழுவதும் சேதாரம்

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.01.29 15:28:54 +0530

அடைந்திருந்ததாக எனது விசாரணையில் தெரியவரவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.1ஐ தவிர வேறு புகார் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். பல புகார்கள் பெறப்பட்டு வழக்கிற்கு எதிராக இருந்ததால் அவை மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. கண்ணுற்ற சாட்சிகள் எதற்காக சம்பவ இடத்திற்கு வந்தோம் என்று விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல அவர்கள் டீ குடிக்க வந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் பதிவு செய்த வாக்குமூலத்தில் சாட்சிகள் டீ குடிக்க வந்ததாக கூறியுள்ளார்களா என்றால் இல்லை. முருகன் டீக்கடைக்கு நேர்எதிரே சம்பவம் நடைபெற்றது என்று பார்வைமகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை சற்று கிழபுறத்தில் நடந்ததாக குறிப்படப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு புகாரை பெறுவதற்கு முன்பு சம்பவம் நடந்த உடன் சம்பவ இடம் செல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சம்பவம் நடைபெற்றதற்கான ரத்தக்கறையோ, உதிரிபாகங்களோ இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு மேபுறமோ, கிழபுறமோ வேகத்தடை உள்ளதாக பார்வைமகஜரிலோ, மாதிரி வரைபடத்திலோ காட்டவில்லை என்றால் சரிதான்.

3. கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட சாட்சிகள் சம்பவ இடத்தில் இருந்து 5 கி.மீ. தூரத்தில் குடியிருப்பவர்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. பார்வைமகஜர் சாட்சிகளை தவிர மற்ற சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள கடை வைத்திருப்பவர்களையோ அல்லது சின்னியம்பாளையம் காலனியில் குடியிருப்பவர்களையோ சம்பவத்தை கேள்விட்ட சாட்சியாகவோ, கண்ணுற்ற சாட்சியாகவோ விசாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல, சாட்சி பாலகிருஷ்ணனை விசாரித்துள்ளேன். மேற்படி சாட்சியை எங்கு எப்போது விசாரித்தேன் என்றால் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தேன். சம்பவ இடத்தை புகைப்படம் எடுத்தேனா என்றால் எடுத்தேன். மேற்படி புகைப்படத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கிற்கு எதிராக சம்பவ இடம் மாறுபட்டுள்ளதால் தான் புகைப்படத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த தவறான

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.29 15:28:39 +0530

புகாரின் பேரில் நான் சாட்சிகளை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் விசாரணை செய்யாமல், தவறான வாக்குமூலத்தை பதிவு செய்து எதிரி மீது தவறான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.29 15:28:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.